Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.810/2019

**Depositions of PW- 6**

| Name | திருமதி.லட்சுமி | Occupation | கிராம நிர்வாக அலுவலர் |
|---|---|---|---|
| Husband name | ராஜபாண்டி | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th day of May 2026.

07.05.2026

எதிரிகள் ஆஜர்.

முதல் விசாரணை

நான் தற்போது பிள்ளையார் குளம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 1ம் எதிரி முனியசாமியை எனக்கு தெரியும். கடந்த 06.09.2019 அன்று வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற குறிப்பாணை நகா.ஆ.1. 3655/2019 நாள் 06.09.2019 ஒரு அவசர குறிப்பாணை ஒன்று எனக்கு தபால் மூலம் அனுப்பப்பட்டது. அந்த தபாலில் திருவில்லிபுத்தூர் நகர் காவல்நிலைய குற்ற எண்.95/2019 பிரிவு.352 இதசவின் படி குற்றம் சாட்டப்பட்ட நபரை நீதிமன்ற காவலில் இருந்து எடுத்து காவல் ஆய்வாளர் விசாரிக்கும்போது மம்சாபுரம் கிராம நிர்வாக அலுவலரும் உடன் இருக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதன்படி மம்சாபுரம் காவல் ஆய்வாளர் 08.09.2019 அன்று என்னையும் எனது கிராம உதவியாளரையும் போன் செய்து மம்சாபுரம் காவல்நிலையம் வருமாறு சொன்னார். அதன்படி நானும் எனது கிராம உதவியாளர் கிருஷ்ணவேனியும் மதியம் சுமார் 12.00 மணியளவில் மம்சாபுரம் காவல்நிலையத்திற்கு சென்றோம். அப்போது காவல் ஆய்வாளர் காவலில் இருந்த ஒரு நபரை இவர்தான் ராஜபாளையம் தெற்கு மலையடிப்பட்டியை சேர்ந்த முனியசாமி என்றும் கூறினார். நான் அதை முனியசாமியிடம் கேட்டு

முனியசாமியிடம் சொன்னேன் அவரும் ஆமாம் என்று சொன்னார். மேற்படி சுமார் 01.00 மணியளவில் நானும் எனது கிராம உதவியாளர் முன்பும் காவல் ஆய்வாளர் அவர்கள் முனியசாமி என்பவர் எந்த துன்புறுத்தலும் அச்சுறுத்தலும் இல்லாமல் வாக்குமூலம் அளித்தார். அந்த வாக்குமூலத்தில் ராக்காட்சியம்மன் கோவிலுக்கு சாமிகும்பிட்டுவிட்டு திரும்பி சென்ற டு வீலரில் வந்த 2 பெண்களிடம் தானும் எனக்கு அறிமுகமான விக்னேஷ் என்பவரும் தனது டுவீலரில் வைத்திருந்த பல்சக்கரத்தை வைத்து மிரட்டி செயின் பறித்தோம் என்று கூறினார். பின்னர் கடந்த 08.09.2019 அன்று மாலை சுமார் 04.00 மணியளவில் மேற்படி 1ம் எதிரி திருட்டிற்கு பயன்படுத்திய இருசக்கர வாகனத்தை கொத்தன்குளம் முனியசாமி கோவில் அருகில் முட்புதருக்குள் போட்டிருப்பதாகவும் செயினை வீட்டில் வைத்திருப்பதாகவும் கூறினார். அதன்படி நாங்கள் மேற்படி 04.00 மணிக்கு முனியசாமி கோவில் அருகே சென்று கிராம உதவியாளர் கிருஷ்ணவேனி முன்னிலையிலும், காவல் ஆய்வாளர் மேற்படி 1ம் எதிரியிடமிருந்து இருசக்கர வாகனத்தை கைப்பற்றினார். மேலும் நானும் கிருஷ்ணவேனியும் அத்தாட்சியில் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். பின்னர் மறுநாளான 09.09.2019 அன்று காலை சுமார் 09.00 மணியளவில் காவல் ஆய்வாளர் முனியசாமி, நானும் எனது கிராம உதவியாளரும் ராஜபாளையம் தெற்கு மலையடிப்பட்டியில் உள்ள வீட்டிற்கு சென்று எங்கள் முன்னிலையில் பீரோவில் வைக்கப்பட்டிருந்த கோதுமை செயின் –1, உருட்டு மாடல் தங்க செயின் –1 முனியசாமி எடுத்து காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தார். அந்த அத்தாட்சியில் நானும்கிராம உதவியாளர் கிருஷ்ணவேனியும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். போலீசார் என்னை விசாரித்தனர். என்னிடம் காட்டப்படும் 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதல் கையெழுத்து அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சி–1 மற்றும் அத்தாட்சி–2 ல் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அத்தாட்சி–1ல் உள்ள முதல் கையெழுத்து அசாஆ.5 ஆகவும் மற்றும் அத்தாட்சி–2ல் ல் உள்ள முதல் கையெழுத்து அசாஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள நகைகள் தான் எங்கள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதாகும். **கோதுமை மாடல் தங்க செயின் புகைப்படம் சாபொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

எதிரி தரப்பில் குறுக்கு விசாணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது ஆனால் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.